தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 2-7-2013

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆடிப் பட்டப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழக வேளாண்மையில் ஆடிப்பட்ட விதைப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். தென் மேற்குப் பருவ மழையையொட்டி இந்த விதைப்பு அமைகிறது. பல்வேறு பயிர்கள் ஆடிப்பட்டத்தில் விதைக்கப்படும். அவ்வாறு விதைக்கப்படும் பயிர்கள் அறுவடை செய்யப்படும் போது என்ன விலைக்கு விற்பனை ஆகும் ? இலாபகரமாக இருக்குமா ? என்று விவசாயிகள் எண்ணிப்பார்த்து விதைப்பு முடிவுகளை எடுத்தல் அவசியம். அத்தகு சிறப்பான முடிவுகளை எடுக்கும் வண்ணம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ஆடிப் பட்டத்தின் முக்கிய பயிர்களான நிலக்கடலை, எள், மக்காச்சோளம் மற்றும் சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு விலை முன்னறிவிப்புகளை செய்துள்ளது. ஆடி மாதத்தில் இப்பயிர்கள் விதைக்கப்பட்டு ஐப்பசி, கார்த்திகையில் அறுவடைக்கு வரும் போது கீழ்க்காணும் விலைகள் நிலவும் என கணிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோளம்**

தற்போது வரத்து குறைவினாலும் மற்றும் கோழிப்பண்ணைகளின் தேவை அதிகரிப்பு ஆகியவற்றால் இதன் விலை ஏறுமுகத்தில் உள்ளது. பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.1500க்கு மேலே உள்ளது, மற்றும் உள்ளூர் விநியோக விலை குவிண்டாலுக்கு ரூ.1550க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. பீகார் மாநிலத்திலிருந்து வரத்து வரத்துவங்கியுள்ளபோதும், கோழிப்பண்ணையின் தேவை அதிகரிப்பாலும் மற்றும் நமது மாநிலத்தின் குறைந்த வரத்துக் காரணமாகவும் ஜூன் 2013ல் விலை ரூ.1500க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. மக்காச்சோளம் பயிரிடப்படும் மாநிலங்களில் காரீப் பருவ விதைப்பு முன்னேறி வருகிறது. பருவமழை சரியான சமயத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் காரீப் விதைப்பின் பரப்பு அதிகரித்து, சாகுபடியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரீப் பருவ வரத்து செப்டம்பர் 2013ல் தொடங்கும்.

கர்நாடகாவிலிருந்து வரத்து ஆகஸ்ட் இறுதியில் துவங்கும். அதுவரை விலை ரூபாய் 1500க்கும் மேல் இருக்கும். அதன் பிறகு, செப்டம்பர் 2013ல் விலை குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 19 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை சந்தையில் நிலவிய மக்காச்சோளத்தின் விலையை ஆராய்ந்தது. மேலும் சந்தை ஆய்வு நடத்தியது. ஆய்வு முடிவுகளின்படி அறுவடை சமயமான அக்டோபர்-நவம்பர் 2013ல் குவிண்டாலுக்கு ரூபாய் 1300-1400 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எள்**

இந்தியாவில் எள், முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றாகும். இந்தியாவில் 2012-2013 ஆம் அண்டு கரீப் பருவத்தில் எள் உற்பத்தி 3.40 இலட்சம் டன்களாகும். இது 2011-12ம் ஆண்டில் சுமார் 4.20 இலட்சம் டன்களாக இருந்தது. ஒடிசா, அசாம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சிவப்பு மற்றும் கருப்பு இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. மகாராஷ்டிரா மற்றும் இதர மேற்கு மாநிலங்களில் வெள்ளை எள் பெருமளவில் பயிரிடப்படுகிறது.

வர்த்தகத் தகவலின்படி தமிழ்நாட்டில் 70 சதவீத எள் உற்பத்தி கரீப் பருவத்தில் நடை பெறுகிறது. ஈரோடு, கரூர், தஞ்சாவூர் கடலூர், சேலம், விழுப்புரம், திருப்பூர், விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மாநிலத்தின் எள் சாகுபடிப் பரப்பில் 63 சதவீதப் பங்களிக்கின்றன. ஆடிப்பட்டத்தில் எள் விதைப்பானது ஜூலை-ஆகஸ்டு மாதத்தில் செய்யப்பட்டு செப்டம்பர்-டிசம்பர் மாதத்தில் சந்தைக்கு விற்பனைக்கு வரும். டி.எம்.வி.3,4,5,6,7 (சிவப்பு எள்ளு), கோ 1 (கருப்பு எள்) எஸ்.வி.பி.ஆர். 1 (வெள்ளை எள்ளு) ஆகிய இரகங்கள் பயிரிடப்படும்.

தமிழ்நாட்டில் மொத்த வரத்தில் 75 சதவீதம் சிவப்பு எள்ளாகும். வெள்ளை எள், ஏற்றுமதி மற்றும் அடுமனை தயாரிப்புப் பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைத் தகவல் மையம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 13 வருட விலைகளை ஆய்வு செய்ததில் அறுவடையின் போது சிவப்பு எள்ளின் விலை செப்டம்பர்- டிசம்பர் 2013ல் கிலோ ஒன்றுக்கு ரூ.72-76 வரை இருக்கும் எனத் தெரிவிக்கின்றன.

**நிலக்கடலை**

உலகளவில் நிலக்கடலை, எண்ணெய் வித்துப் பயிர்களில் மிக முக்கியமான ஒன்றாகும். பாமாயில், சூரியகாந்தி, கடுகு மற்றும் சோயா பீன்ஸ் போன்ற இதர எண்ணெய் வித்துக்களின் விலை நிலக்கடலை எண்ணெய் விலையை பாதிக்கின்றது. உலகளவில் 2012-2013ல் மொத்த நிலக்கடலை உற்பத்தி 37.17 மில்லியன் டன்களாகும். 2011-12ல் இதன் உற்பத்தி 35.33 மில்லியன் டன்கள் ஆகும்.

இந்தியாவில் 2012-13ல் சமையல் எண்ணெய் இறக்குமதி 103.1 இலட்சம் டன்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2011-2012ல் இறக்குமதி 97.8 இலட்சம் டன்களாக இருந்தது. இந்தியாவில் 2012-2013 ஆண்டு கரீப் பருவத்தில் நிலக்கடலை உற்பத்தி 26.20 இலட்சம் டன்கள் ஆகும். கரீப் 2011-2012ல் இது 41.75 இலட்சம் டன்கள் ஆக இருந்தது. குஜராத், ஆந்திரப்பிரதேசம், இராஜஸ்தான், தமிழ்நாடு, கர்நாடகா, மத்தியப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் நிலக்கடலை உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

2010-2011ல் தமிழ்நாட்டில் நிலக்கடலை பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவு 3.85 இலட்சம் எக்டர் ஆக இருந்தது. திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் புதுக்கோட்டை ஆகியன நிலக்கடலை பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். ஆடிப்பட்டத்தில் மானாவாரி நிலக்கடலை 60 சதவீதம் பயிரிடப்படுகிறது. TVM 7, VRI 2,VRI Gn 5,VRI Gn 6,TMV Gn 13 முதலியவை தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய நிலக்கடலை இரகங்கள் ஆகும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் ஆய்வு முடிவுகளின்படி திருப்பூர், கோவை மாவட்டங்களில் நிலக்கடலை காய்க்கு கிலோ ஒன்றுக்கு ரூ.45 முதல் 47 வரை கிடைக்கும். திண்டிவனம் சந்தை பகுதியில் நிலக்கடலை பருப்பின் விலை ரூ.55 முதல் 60 வரை இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளன.

**சின்ன வெங்காயம்**

சின்ன வெங்காயம் இலாபகரமான விலையை அளிப்பதால் ஆண்டு முழுவதும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய கணக்கீட்டின் படி 2012-13ம் ஆண்டில் தமிழ்நாட்டில் வெங்காயத்தின் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே, 36,310 எக்டர் மற்றும் 3,98,930 டன்கள் ஆகும். இது 2011-12ம் ஆண்டில் 37,120 எக்டர் மற்றும் 5,56,450 டன்களாக இருந்தது. இதில் 70 சதவீத பரப்பிற்கு மேல் சின்ன வெங்காயம் ஆகும். தற்போது தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி மாவட்டங்களிலிருந்து சந்தைக்கு வரத்து உள்ளது. வரத்துக் குறைவினால் 2013ம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரை சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூபாய் 45 முதல் 80 வரை இருந்தது.

*கர்நாடகவிலிருந்து தற்போது வரத்து ஆரம்பித்து உள்ளது. இது ஜூலை 2013 வரை நீடிக்கும். அதே சமயம் மழையினால் தரம் குறைந்துள்ளது. மைசூர் வெங்காயத்தின் விலை கிலோவிற்கு ரூபாய் 55-60 வரை உள்ளது. தற்போது குறைந்த அளவு உற்பத்தியினால் சின்ன வெங்காயம் ஏற்றுமதி இல்லை. கோ 5 இரகம் தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய சின்ன வெங்காயம் ஆகும்.*

*விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை ஆராய்ந்தது. சந்தை அய்வுகளும் நடத்தப்பட்டன.*

*ஆய்வு முடிவுகளின் படி சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை அறுவடை சமயத்தில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2013ல் கிலோவிற்கு ரூ.45க்கு மேல் இருக்க வாய்ப்புகள் உள்ளன.*

*சிறந்த தரமான சின்ன வெங்காயத்தின் விட்டம் 27 மில்லி மீட்டருக்கு மேலேயும், வட்ட வடிவத்துடனும் மற்றும் இளஞ்சிவப்பு முதல் சிவப்பு நிறத்துடனும் இருக்க வேண்டும். மேற்கண்டவற்றின்படி விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க அறிவுறுத்தப்படுகின்றனர். விவசாயிகள் நல்ல விலை கிடைக்க மேற்கண்ட தரத்தை தரும் இரகங்களை பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.*

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி : 0422 -2431405*

மக்கள் தொடர்பு அலுவலர்